ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2004/59 - 2017 පෙබරවාරි මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.02.02

*2004/59 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பு

முதலாவது திருத்தம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.22 ஆந் திகதிய 1885/31 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை அதிபர் சேவையின் பிரமாணக் குறிப்பு கீழ்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது.

அரச சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம்.

எச். எம். காமினி செனவிரத்ன,
செயலாளர்,
அரச சேவை ஆணைக்குழு.

2016, திசெம்பர் 27.

| பகுதி | தொகுதி இல. | திருத்தங்கள் |
|---|---|---|
| 17 | 17.4.3 | (அ) இப்பிரமாணக் குறிப்பு அமுல்படுத்தப்படும் தினமன்று இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரத்திலிருந்து முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய 2008.07.01 ஆந் திகதி தொடக்கம் இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்த்துவதற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பிற்கும்,<br><br>(ஆ) இப்பிரமாணக் குறிப்பு அமுல்படுத்தப்படும் தினமன்று இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரத்திலிருந்து முன்னைய சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைய 2008.07.01 ஆந் திகதி தொடக்கம் இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்த்துவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் கீழ் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு உள்ளீர்க்கப்படுவர்.<br><br>I. இவ் உத்தியோகத்தர்களின் சிரேஷ்டத்துவம் 2008.07.01 ஆந் திகதியன்று I ஆம் வகுப்பிற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும் ஏனைய சகல உத்தியோகத்தர்களையும் விடக் குறைவாக இருக்க வேண்டும் ;<br><br>II. இவ் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பின் சம்பளத்தை மாத்திரம் பெற்றுக்கொள்ள முடியும். |

| பகுதி | தொகுதி இல. | திருத்தங்கள் |
|---|---|---|
| | | III. இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பின் அதிபர்களுக்கான திறமைகள்/மட்டுப்படுத்தப்பட்ட முறையின் கீழ் இலங்கை கல்வி நிர்வாக ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்குப் பதவி உயர்த்துவதற்காக தகைமை பெறுவது 2008.06.30 ஆந் திகதியன்று காணப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் I ஆம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்காகத் தேவையான சேவைக்காலம் உட்பட ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்த தினம் தொடக்கமாகும்.<br><br>குறிப்பு.- 2008.06.30 ஆந் திகதியன்று காணப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்கு உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை அல்லது புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 2 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல், சம்பளத்தைத் தவிர ஏனைய பயன்களைப் பெறுவதற்கு கட்டாயமானதாகும். |

02- 709

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.